பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 26 ஞாயிற்றுக்கிழமை 09.05.2021 கதிர் 52

## மேலும் 1,365 பேர் பூரண குணமடைவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 1,365 பேர் பூரணமாகக் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரண மாக குணமடைந்தவர்களின் ☞2

## மேலும் சில இடங்கள் இன்று முதல் முடக்கம்

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலால் மேலும் 21 கிராம சேவகர் பிரிவுகள் இன்று காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தின் ரக்வான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலோ கந்த, ரம்புக, கத்லான, தனபெல, இம்புக்கந்த மற்றும் பொத்துபிட்டிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட ☞2

## 130 கர்ப்பிணிகளுக்குக் கொரோனா; இருவரின் நிலைமை கவலைக்கிடம்!

இலங்கையில் புதிய கொரோனா கொத்தணியில் தொற்றுக்குள்ளான 130 கர்ப்பிணிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது எனவும் குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளான அதிகமான கர்ப்பிணிகள் முல்லேரியா, நெவில் பெர்னாண்டோ மற்றும் ஹோமாகம ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ☞2

### இலங்கையில் கொரோனாப் பரவல் அதியுச்சம்

# 6 வைத்தியசாலைகளை புதிதாக அமைக்க முடிவு



### மேலும் 60 ஆயிரம் கட்டில்களை தயார் செய்யவும் நடவடிக்கை

**இலங்கையில் நாளாந்தம் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், புதிதாக 06 வைத்தியசாலைகளை ஸ்தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.**

**இந்தத் தகவலை கொரோனா அவசர சிகிச்சை மற்றும் சுகாதாரக் கட்டமைப்புக்கான முன்னாயத்த செயற்றிட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.** ☞2

## 23 மாவட்டங்களில் தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

நாட்டின் 23 மாவட்டங்களில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நேற்றுப் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர் என்று கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பில் மாத்திரம் நேற்று 411 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாரஹேன்பிட்டி ☞2

## டிப்பர் - ஓட்டோ மோதல்; 7 வயது சிறுவன் சாவு!



பொலன்னறுவை – மட்டக்களப்பு பிரதான வீதியின் மனம்பிட்டி பிரதேசத்தில் டிப்பர் வாகனம் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் 7 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று மாலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் ☞2

## 492 ஆண்களை பலியெடுத்த கொரோனா

இலங்கையில் கடந்த 02ஆம் திகதியில் இருந்து நேற்று வரை 88 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 786 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 492 பேர் ஆண்கள் எனவும் 294 பேர் ☞2



## தமிழ் எம்.பிக்களுக்கு சிங்களத்தில் கடிதமா?

### கொதித்தெழுகின்றார் சுமந்திரன்

நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் சிங்கள மொழியில் வழங்கப்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் விசனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அதிகாரிகள் மொழிக் கொள்கையை ☞2

## கைதடியில் இன்று மதியம் மாபெரும் விபத்து தவிர்ப்பு



☞2

## பிலியந்தலை பொதுச் சந்தை மறு அறிவித்தல் வரை மூடல்

பிலியந்தலை பொதுச் சந்தை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

குறித்த சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் சிலர் பதிவானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பிலியந்தலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தையில் உள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 101 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 07ஆம் திகதி 269 ☞2

## கோர விபத்தில் ஒருவர் பலி; நான்கு பேர் கவலைக்கிடம்!



அனுராதபுரம், மே 09

அனுராதபுரம் – திருகோணமலை பிரதான வீதியின் நொச்சியாகம மொரகந்த பிரதேசத்தில் புத்தளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனம் ஒன்று மேலும் சில வாகனங்களுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. ☞2

## தமிழ் எம்.பிக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முறையாக நடைமுறைப்படுத்துவதில் குறைவான அணுகுமுறையைக் கையாள்கின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அவசர நிலைமையைப் பிரகடனப்படுத்தக் கோரி, சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இந்நிலையில், அவரது பிரேரணை சுகாதார அமைச்சுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் கடிதம் அவருக்கு சிங்கள மொழியில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் உறுப்பினர்களுக்கு சிங்கள மொழியில் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. நாம் இந்தப் பிரச்சினையை எத்தனை தடவைகள் முன்வைத்துள்ளோம்?

நாடாளுமன்ற ஊழியர்களுக்கான சுற்றறிக்கைகளும் சிங்களத்தில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இருமொழிக்கொள்கையை, குறைந்த பட்சம் நாடாளுமன்றத்திலேனும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான உரிமை மீறல்கள் தொடர்வது ஏன் கவனிக்கப்படுவதில்லை? என்று சுமந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

## டிப்பர் - ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயம் அடைந்த சிறுவனின் தந்தை மற்றும் மற்றுமொரு யுவதி ஆகியோர் பொலன்னறுவை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்று பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தரம் 2இல் கல்வி கற்கும் கிஹான் மதுசங்க என்ற சிறுவனே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஓட்டோ சாரதி அதிக வேகத்தில் வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் கவனயீனத்துடன் இருந்தமை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## 6 வைத்தியசாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா நோயாளர்களுக்காக மேலும் 60 ஆயிரம் கட்டில்களைத் தயார் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

நாட்டிலுள்ள 32 வைத்தியசாலைகளை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றும் செயற்றிட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களில் நிறைவுபெறும் எனவும் மருத்துவர் ஜயசுந்தர பண்டார சுட்டிக்காட்டினார்.

## 130 கர்ப்பிணிகளுக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கர்ப்பிணிப் பெண்கள் இயலுமானவரை வீட்டில் இருந்து கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுமாறும், சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## மேலும் சில இடங்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளன.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாகொல, குடிக்மிட்டிய, குடாவ, தெல்கொட கிழக்கு, தெல்கொட மேற்கு, தேவாலகம, கலஹாகம, கொஸ்வத்த, கபஸ்ஸர கந்த, வதுராவ, வெம்பிட்டியகொட, வெத்தாகல கிழக்கு, வெத்தாகல மேற்கு மற்றும் தவுலகலகம கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்கூம்ஸ் தோட்ட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

## 23 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் மாத்திரம் 60 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், பிலியந்தலையில் 43 பேருக்கும், மொரட்டுவையில் 31 பேருக்கும், கல்கிஸை, மிரிஹான பகுதிகளில் தலா 21 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று 347 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திற்கு அடுத்தபடியாக களுத்துறை மாவட்டத்தில் நேற்று 358 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் பாணந்துறை தெற்குப் பகுதியில் மாத்திரம் 88 பேருக்குத் தொற்று உறுதியாகி உள்ளது. அதேவேளை, பாணந்துறை வடக்கில் 66 பேருக்கும், களுத்துறை வடக்கில் 25 பேருக்கும், ஹொரணையில் 22 பேருக்கும், இங்கிரிய பகுதியில் 20 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

காலி மாவட்டத்தில் 188 பேரும், இரத்தினபுரியில் 172 பேரும், குருநாகலையில் 75 பேரும், கண்டியில் 70 பேரும், நுவரெலியாவில் 45 பேரும், மாத்தளையில் 32 பேரும், அம்பாறையில் 25 பேரும், திருகோணமலையில் 19 பேரும் நேற்று பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நேற்று 1,896 புதிய தொற்றாளர்கள் பதிவான நிலையில அதில் 6 பேர் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் என்று கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## பிலியந்தலை பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் குறித்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, பிலியந்தலை பொதுச் சந்தை தொகுதியை இன்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடத் தீர்மானிக்கப்பட்டது எனப் பிலியந்தலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.


## மேலும் 1,365 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கை ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 463 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் இன்று பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கைதடியில் இன்று ...

**(ந.லோகதயாளன்)**

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாணத்துக்குப் பயணித்துள்ளது. கைதடிப் பாலத்தைக் கடக்கும்போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியை விட்டு விலகிச் சென்றுள்ளது.



வீதியை விட்டு விலகிச் சென்றுள்ளது. அதனால் எதிரே பயணித்த 4 வாகனங்கள் சடுதியாக பிரேக் செய்ததால் பின்னே சென்ற டிப்பர் வீதியை விட்டு விலக முற்பட்ட போதும் சாரதியால் கட்டுப்படுத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

யாழ். கைதடிப் பாலத்துக்கும் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் ஏ - 9 வீதியில் இந்தச் சம்பவம் இன்று பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றது.

காரைநகர் சாலைக்குச் சொந்தமான பஸ் ஏ - 9 கண்டி வீதியூடாக யாழ்ப் பஸ் தடுமாறிப் பயணித்ததால் எதிரே பயணித்த வாகனங்கள் சடுதியாக பிரேக் செய்ததால் பின்னே சென்ற டிப்பர் வீதியிலிருந்து விலக முற்பட்ட போதும் சாரதியால் கட்டுப்படுத்தப்பட்டது.

கடும் மழை பொழிந்து கொண்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து பஸ்ஸில் பயணித்தவர்கள் மற்றொரு பஸ்ஸில் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

## கோர விபத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிக வேகத்தில் பயணித்துள்ள கொள்கலன் வாகனம் இரண்டு மோட்டார் சைக்கிள்களிலும் மற்றும் மிதிவண்டி ஒன்றிலும் மோதியுள்ளது.

பின்னர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய ரக லொறி ஒன்றில் மோதி, அருகில் இருந்த பாதுகாப்புச் சுவர் மற்றும் மின் கம்பத்தில் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த நான்கு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 492 ஆண்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெண்கள் எனவும் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காலத்துக்கேற்ப முடிவுகள்

அரசியல் முடிவுகள் அந்தந்தக் கால கட்டத்தின் யதார்த்தப் புற நிலைகளுக்கேற்ப எடுக்கப்படுகின்றன.

காலங்கடந்து, பிறிதொரு அரசியல் சூழ்நிலையில் இருந்து கொண்டு அவற்றை நோக்கினால் அவை தவறாகப் படக் கூடும்.

ஆனால், அன்றைய அரசியல் நிலையில் அதுதான் சாத்தியமானதாகவும், சரியானதாகவும் இருந்திருக்கும். காலங்கடந்த சூழலில் அது குறித்து விமர்சிப்பது பொருத்தமற்றது.

2010 ஜனாதிபதித் தேர்தலில் அப்போதுதான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து இறங்கிய அப்போதைய ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை எடுத்த தமிழர் தலைமையின் நிலைப்பாட்டையும் இன்றைய கண்ணோட்டத்தில் இருந்து விமர்சிப்பதும் அத்தகையதுதான்.

1987 இல் இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட மறுத்து, இந்திய அமைதி காக்கும் படையுடன் முரண்பட்டு, அதனுடன் நேரடி மோதலுக்கு இறங்கிய விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை அப்போது பலரும் முட்டாள்தனமானது என்று விமர்சித்தனர். மலையுடன் மோதும் பிற்போக்குத்தனமான செயற்பாடு என்றும் கண்டித்தனர். ஆனால் சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்து பிராந்திய அரசியல் களநிலைவரங்களைப் பயன்படுத்தி, இந்தியப் படையை தமிழர் தாயகத்திலிருந்து தலைகுனிவோடு வெளியேற்றிய போது, அதனைப் புலிகளின் மிகப் பெரிய இராஜதந்திர மற்றும் இராணுவ சாதனை என்றார்கள். ஆனால் இப்போது முப்பது ஆண்டுகள் கழித்து, அப்படி நடந்து கொண்டமை தவறு என மீண்டும் விமர்சிக்கின்றார்கள்.

அது, அன்றைய களநிலைமைகளுக்கு – யதார்த்தச் சூழ்நிலைகளுக்கு – ஏற்ப, அப்போது விடயங்களைக் கையாண்ட தலைமைகளின் இயலுமை மற்றும் இயலாமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம். இன்று அதனை விமர்சிப்பதற்கு அல்லது பரிசீலிப்பதற்கு முயலும் போது அன்றைய யதார்த்தப் புறச் சூழ்நிலையை கவனத்தில் கொள்வது மிகமிக முக்கியமாகும்.

2009 மேயில் தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை ஆயுத முனையிலேயே அடக்கி, முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத் தளபதியான ஜெனரல் சரத் பொன்சேகாவை அடுத்த ஆறு மாத காலத்தில் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதற்குத் தமிழர்கள் எடுத்த தீர்மானமும் கூட இத்தகைய யதார்த்தப் புற சூழலின் அடிப்படையிலேயே நோக்கப்பட வேண்டும்.

அன்றைய தேர்தலில் தமிழ் மக்களின் முன்னால் இருந்த கேள்வி ஒன்றுதான்.

சுட்டவருக்கு வாக்குப் போடுவதா? அல்லது சுடச் சொன்னவருக்கு வாக்குப் போடுவதா? – என்பதுதான்.

சுடச் சொன்னவருக்கு எதிராக வாக்குப் போடுவதற்கு தமிழர்கள் தீர்மானித்தார்கள். அதன் அர்த்தம் சுட்டவரை ஆதரிப்பது என்பதல்ல.

வரலாற்றில் பிற்காலத்தில் மிக மோசமான முடிவு என்று வர்ணிக்கப்படக் கூடிய அந்தத் தீர்மானத்தை எடுத்த தமிழர் தரப்பின் தலைவரான – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான – இரா. சம்பந்தன் அந்த முடிவுக்கான காரணத்தை அப்போதே தெளிவாக விளக்கியிருந்தார்.

அதனை அன்றைய அரசியல் களத்தின் யதார்த்தப் புறநிலையில் நாம் நோக்குவது முக்கியமானது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக யுத்தக் குற்றங்கள் தாராளமாக இழைக்கப்பட்டன. அடிப்படை மனித உரிமைகள் மோசமாக இடம்பெற்றன. மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களும் தாராளமாகப் புரியப்பட்டன. ஆனால் அவை எவையும் அச்சமயத்தில் வெளியே வரவேயில்லை. பெரிதாகக் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

அந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட கையோடு, அச்சமயம் இலங்கைப் படைகள் புரிந்த மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் விதத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டு வரப்பட்ட பிரேரணை, தலைகீழாக மாற்றப்பட்டு, இலங்கையில் யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்த இலங்கை அரசைப் பாராட்டும் தீர்மானமாக அது மாற்றப்பட்டது. அவ்வளவு தூரம் சர்வதேச ரீதியில் நிலைமை தமிழர்களுக்கு சார்பற்றதாக இருந்தது.

அச்சமயத்தில்தான் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை சம்பந்தன் எடுத்தார். அப்போது அவர் ஒரு கருத்தை முன்வைத்தார். தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கு எதிரான இராணுவக் கொடூரத்தை முன்னெடுத்த பௌத்த, சிங்களப் பேரினவாதம் பற்றிய கருத்து அது.

*“யுத்தத்தை முன்னெடுத்த இராணுவ இயந்திரத்துக்குத் தலைமை வகித்தவர் சரத்பொன்சேகா. அவரின் உள்வீட்டு முரண்பாடு உண்மையில் பௌத்த – சிங்களப் பேரினவாதம் என்ற பெருஞ்சுவரில் ஏற்பட்ட சிறிய விரிசல். அதைப் பெரும் பிளவாக – பாரிய வெடிப்பாக – மாற்ற வேண்டும். அதற்கு இந்த முரண்பாட்டில் வலிமை குன்றியிருக்கும் பக்கத்தை வலிமைப்படுத்துவதே நமது தந்திரோபாயமாக இருக்க வேண்டும். அதனால்தான் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை நாம் எடுத்தோம்.”* – என்றார் சம்பந்தன்.

அந்த மித்திரபேதத்தில் எழுந்த முரண்பாட்டில் விளைந்த நலனை தமிழினம் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. ஜெனிவா அமர்வு தமிழருக்கு சாதகமான நிலையை நோக்கி நகர்ந்தமைக்கு இராணுவத் தரப்பின் உள்வீட்டு வெடிப்பில் அம்பலமான விடயங்களும் காத்திரமான பங்கு வகித்தன என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

## அத்துமீறி நுழைகின்றமையைத் தடுப்பதற்கு நல்லூர் பின் வீதி ஆதனத்தைச் சுற்றி வேலி



யாழ். மாநகர சபையின் அனுமதி பெறாமல், சபைக்குரிய ஆதனத்தை அத்துமீறிப் பயன்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் நல்லூர் பின் வீதியில் உள்ள ஆதனம் ஒன்று அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் பகுதியில் பருத்தித்துறை வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனம் காணப்படுகின்றது.

குறித்த ஆதனம், இதுவரை காலமும் அறிக்கையிடப்படாமல் திறந்த வெளியாகக் காணப்பட்டது.

அத்துடன், இந்த ஆதனத்தைச் சில வர்த்தக நிறுவனங்கள் மாநகர சபையின் அனுமதியுடன் உரிய குத்தகைப் பணம் செலுத்தி தமது பொருள்களின் வியாபார மற்றும் விளம்பர நோக்கங்களுக்குப் பயன்படுத்தின.

இதேவேளை, குறித்த ஆதனத்தை சிலர் அத்துமீறிப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில், அந்த ஆதனத்தை அறிக்கைப்படுத்திப் பாதுகாக்கும் நோக்குடன் யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி யாரும் உட்செல்ல முடியாதவாறு ஆதனத்தைச் சூழ முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொடிகாமம் - பருத்தித்துறை வீதி போக்குவரத்துக்காகத் திறப்பு

யாழ்ப்பாணம், மே 09

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதி பொதுமக்களின் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக கொடிகாமம் வடக்கு மற்றும் மத்தி ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவு கடந்த 5 ஆம் திகதி முதல் முடக்கப்பட்டுள்ளது.

அதனால் அப்பகுதி ஊடாக செல்லும் கொடிகாமம் – பருத்தித்துறை பிரதான வீதி கடந்த 3 நாள்களாக மூடப்பட்டு இருந்தமையால், குறித்த வீதியால் பயணம் செய்த பலரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து, பல கிலோ மீற்றர் தூரம் சுற்றி பயணிக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, ‘பிரதான வீதிகளினூடான போக்குவரத்தைத் தடை செய்யவில்லை எனவும், குறித்த இரு கிராமங்களுக்குள் உட்செல்ல, வெளியேற மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் தற்போது குறித்த வீதி ஊடான போக்குவரத்துக்கு இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

அதேவேளை கொடிகாமம் மத்தி மற்றும் வடக்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளும் தொடர்ந்து முடக்கத்தில் உள்ளன எனவும், குறித்த இரு கிராமத்திற்குள் உட்செல்லவோ, வெளியேறவோ அனுமதி இல்லை எனவும், அப்பகுதி ஊடாக செல்லும் குறித்த வீதியின் ஊடாகப் போக்குவரத்து செய்வதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

## சுவர்ணமஹால் வைப்பாளர்களுக்கு மேலதிக இழப்பீட்டுக் கொடுப்பனவு

சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பி.எல்.சியின் தகைமையுடைய வைப்பாளர்களுக்கு அல்லது சட்டரீதியான பயன் பெறுநர்களுக்கு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் மேலதிக இழப்பீட்டுக் கொடுப்பனவானது வழங்கப்படவுள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

அதற்கிணங்க, உரிய வைப்புக்களின் தகைமை உடைய வைப்பாளர்கள் தொடர்புடைய சட்டரீதியான பயன்பெறுநர்கள் 2021.05.10 ஆம் திகதி தொடக்கம் தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் எந்தவொரு மக்கள் வங்கி கிளையில் இருந்தும் தங்கள் உரிமை கோரல்களை பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் வங்கி வளாகத்தில் அதிக எண்ணிக்கையிலானோர் ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறும், சுகாதார வழிகாட்டுதல்களுடன் கண்டிப்பாக இணங்கிச் செயற்படுமாறும் தகைமையுடைய வைப்பாளர்கள் தொடர்புடைய சட்டரீதியான பயன் பெறுநர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## தனிமைப்படுத்தல் மீறிய 426 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 426பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று(ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணிக்கு நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாரிய கஞ்சா வியாபாரம் சுற்றி வளைக்கப்பட்டது



தலங்கம பொலிஸாரால் பத்தரமுல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 8 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பாதுக்க, கலகெதரவில் இரு பகுதிகளில் இருந்து மேலும் 8 கிலோ 32 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 4 பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்யப்படவுள்ளது என பொலிஸார் தெரி விக்கின்றனர்.

# நாளை முதல் தமிழகத்தில் முழு ஊரடங்கு
# சொந்த ஊர்களுக்கு மக்கள் விரைகின்றனர்



நாளை முதல் தமிழகமெங்கும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதால் சொந்த ஊர் செல்வதற்காக மக்கள் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பஸ் நிலையங்களில் குவிந்துள்ளனர்.

கொரோனாவின் இரண்டாவது அலையின் தீவிரம் காரணமாக தமிழகம் முழுவதும் நாளை முதல் வரும் 24 ஆம் திகதி வரை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளது.

முழு ஊரடங்கு காரணமாக சென்னையில் வசிக்கும் மக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். ஊருக்குச் செல்ல வசதியாக 24 மணி நேரமும் பஸ்கள் இயக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியான பெருங்களத்தூரில் பஸ்களுக்காகப் பொதுமக்கள் பெருமளவில் வந்து சேர்ந்து மக்கள் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கிய நிலையில், பெரும்பாலானோர் பேருந்துகள் கிடைக்காமல் நீண்ட நேரம் காத்திருக்க நேர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதனால், இன்று கூடுதல் பஸ்களை இயக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று மட்டும் சென்னையில் இருந்து 1.33 லட்சம் பயணிகள் வெளி மாவட்டங்களுக்குப் பயணித்தனர் என கூறப்படுகிறது.

ஏராளமான மக்கள் இருசக்கர வாகனங்களிலும் பயணித்து வருகின்றனர்.

இதனால் செங்கல்பட்டு பரனூர் சுங்கச் சாவடி யில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக காணப்படுவ தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## டெல்லியில் 17ஆம் திகதி வரை முழு ஊரடங்கு பிறப்பிப்பு

### முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு

டெல்லியில் நடைமுறையிலுள்ள முழு ஊரடங்கு வரும் 17ஆம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது என முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.



தற்போது அமுலில் உள்ள ஊரடங்கை, மருத்துவ உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், பல்வேறு இடங்களில் ஒக்சிஜன் மற்றும் படுக்கை வசதிகளை அதிகரிக்கவும் பயன்படுத்திக் கொண்டோம் என அரவிந்த் கெஜ்ரிவால் கூறியிருக்கிறார்.

டெல்லியில் ஒக்சிஜன் நிலைமை மேம்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அச்சத்தை ஏற்படுத்தும் அழைப்புகள் மருத்துவமனைகளிலிருந்து தற்போது வருவதில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த ஊரடங்கு காலகட்டத்தில் தடுப்பூசி செலுத்தும் பணியைத் தொடங்கிவிட்டதாகவும், இதற்கென பள்ளிகளில் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். தடுப்பூசி போட்டுக்கொள்ள இளைஞர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர் எனக் குறிப்பிட்ட அவர், தடுப்பூசிகளுக்கு சிறிதளவு பற்றாக்குறை உள்ள போதிலும், மத்திய அரசு உதவும் என நம்புவதாகவும் கூறினார். முழு ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் மெட்ரோ ரயில்கள் இயங்காது என்றும் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் புதிய அமைச்சரைவயின் முதல் கூட்டம் அவரச நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஆராய்வு






முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவையின் முதல் கூட்டம் இன்று காலை 11.30 மணிக்குத் தொடங்கி ஒரு மணி நேரத்திற்கும் மேல் நடைபெற்றது.

கொரோனாப் பரவல் அதிகரித்துவரும் நிலையில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. ரெம்டெசிவிர் மருந்து போதுமான அளவு இருப்பு உள்ளது என்பதை உறுதி செய்யவேண்டும் என்றும், ஒக்சிஜன் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர்களுக்கு முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒக்சிஜன் உற்பத்தியை தொடங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

நாளை முதல் பொது முடக்கத்தை செயல்படுத்துவது பற்றியும் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாகவும் புதிய திட்டப் பணிகள், மக்கள் நலப்பணிகள் குறித்தும், குறிப்பாக கொரோனா நிவாரணமாக முதற்கட்டமாக இரண்டாயிரம் ரூபாவை வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது என தகவல் வெளியாகியுள்ளது.

## 14 நாள்கள் முழு முடக்கம் என்பதை மனதில் வைத்து பலரும் மொத்தமாக மதுபானங்களை வாங்கி குவிப்பு



தமிழகத்தில் முழு ஊரடங்கின் காரணமாக நாளை முதல் டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்பதால் மதுபானங்களை வாங்குவதற்காக டாஸ்மாக் கடைகளின் முன்னால் பெருங்கூட்டம் கூடியிருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் கொரோனா விதிகளைக் காற்றில் பறக்கவிட்டு முண்டியடித்து பலரும் மதுப் போத்தல்களை வாங்கியமையை அவதானிக்க முடிந்துள்ளது. 14 நாட்கள் முழு முடக்கம் என்பதை மனதில் வைத்து பலரும் மொத்தமாக மதுப் போத்தல்களை வாங்கி சாக்கு மூட்டைகள், அட்டைப்பெட்டி கள் மற்றும் வாகனங்களில் அடுக்கி வைத்து கொண்டு செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தமிழக அரசின் முழு ஊரடங்கு அறிவிப்பால், கோவையில் டாஸ்மாக் மதுபானக் கடைகள், எலைட் மது விற்பனைக் கடைகளில் ஏராளமானோர் இன்று நீண்ட வரிசையில் காத்திருந்து வாங்கிச் சென்றுள்ளனர். கோவை மாவட்டத்தில் 350 க்கும் மேற்பட்ட டாஸ்மாக் கடைகள் உள்ளன. இவற்றோடு இணைக்கப்பட்டி ருந்த மதுக்கூடங்கள், சில வாரங்களுக்கு முன்னரே மூடப்பட்டுவிட்டன. இந்த ஊரடங்கு காலத்தில் கடந்த சில நாள்களாக காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை மட்டுமே டாஸ்மாக் மதுக்கடைகள் திறக் கப்பட்டுவந்தன. இந்த நிலையில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளதால் நேற்றும் இன்றும் மட்டும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை டாஸ்மாக் மதுக்கடைகள் இயங்கும் என அறிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## கொரோனா நோயாளிகளுக்கு சித்த மையங்களில் சிகிச்சை

### அமைச்சர் மா.சுப்ரமணியன் தகவல்



கொரோனா நோயாளிகளுக்கு 12 இடங்களில் சித்த மருத்துவ மையங்களைத் திறந்து சிகிச்சையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் மா.சுப்ரமணியன் கூறியுள்ளார்.

லேசான அறிகுறிகள் உள்ள கொரோனா நோயாளிகள் சித்த மருத்துவ மையங்களுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காசிமேடு மீன்சந்தை இரு வாரங்களுக்குப் பின்னர் திறப்பு

### கொரோனாவை மறந்து மக்கள் கூடினர்!

சென்னை காசிமேட்டில் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் மீண்டும் மீன் சந்தை திறக்கப்பட்டுள்ளது. நாளை முதல் முழு ஊரடங்கு என்பதால் மட்டுப்படுத்தப்பட்ட ஊரடங்குக் காலத்தில் மூடப்பட்டிருந்த மீன் சந்தை இரண்டு வாரங்களுக்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பொதுவாக விடுமுறை நாள்களில் திருவிழா போன்று காட்சியளிக்கும் காசிமேடு மீன் சந்தைக்கு வெளிப்பகுதிகளில் இருந்தும் ஏராளமான மக்கள் மீன் வாங்குவதற்கு வருவது வழமை என்பதால், சந்தை திறக்கப்படும் செய்தி அறிந்ததும் கூட்டம் கூடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால், இந்த மீன் சந்தையை மையப்படுத்தி கொரோனாப் பரவல் அதிகரிக்கலாம் என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து நேற்று காவல் துறையினர் காசிமேடு பகுதியில் ஆய்வு மேற்கொண்டிருந்தனர். இதன்படி மீன் மொத்த விற்பனைக்கு ஓரிடமும், சில்லறை விற்பனைக்கு ஓரிடமும், ஏலம் விடுவதற்கு ஓரிடமும் என தனித்தனிப் பகுதிகள் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. நாளை முதல் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்படுவதைத் தொடர்ந்து இன்று மீன் விற்பனைக்குத் தடை எதுவும் இல்லை என்பதனால் அதிகாலை முதலே குவிந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் திணறியுள்ளனர்.

முகக் கவசம் அணியாமலும், தனிமனித இடைவெளியைக் கடைபிடிக்காமலும் காசிமேடு மீன் சந்தையில் கூடிய கூட்டம் நோய்த் தொற்று அச்சத்தை அதிகரித்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# சீனா ஏவிய ரொக்கெட்டின் பாகங்கள் இந்திய பெருங்கடல் பகுதியில் எரிந்தன

சீனாவின் ரொக்கெட் பாகங்கள், இந்திய பெருங்கடல் பகுதிக்கு மேல் வானில் எரிந்து சாம்பலாகிவிட்டன என சீனா தெரிவித்துள்ளது. சீனாவின் விண்வெளி பொறியியல் திட்ட அலுவலகத்தை மேற்கோள் காட்டி சீனாவின் அரச தொலைக்காட்சி இன்று காலை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ தரவுகளின் அடிப்படையில் விண்வெளி நிகழ்வுகளைக் கண்காணிக்கும் Space-Track அமைப்பும் இதை டுவிட்டரில் உறுதி செய்துள்ளது. சீன விண்வெளி நிலையத் தின் கட்டுமானக் கலத்தை விண்ணில் நிறுத்தி விட்டு பூமிக்குத் திரும்பிய சீனா வின் லாங் மார்ச் என்ற இந்த ரொக்கெட், திடீரென விஞ்ஞானிகளின் கட்டுப்பாட்டை இழந்து பூமியை நோக்கி வேகமாக வந்தது.

18 தொன் எடையுள்ள இந்த ரொக்கெட்டின் உடைந்த பாகங்கள் மக்கள் வசிக்கும் இடத்தில் விழக்கூடும் என நிலவிய அச்சம் இப்போது அகன்றுள்ளமை குறிப்பி டத்தக்கது.



## பதினாறு ஆண்டுகளுக்கு பின்னர் சிலி-பொலிவியா ரயில்சேவை



பொலிவியாவில் இருந்து 16 ஆண்டுகளுக்குப் பின் சிலி நாட்டிற்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இயற்கை பேரிடர் காரணமாக சிலி மற்றும் பொலிவியா நாடுகளுக்கு இடையிலான ரயில் சேவை கடந்த 2005ஆம் ஆண்டு தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சுமார் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் 616 கிலோ மீற்றர் தூரம் தண்டவாளங்கள் புதுப்பிக்கப்பட்டு சோதனை ரயில் ஓட்டம் நடந்தது.

பொலிவியாவில் இருந்து புறப்பட்ட 16 பெட்டிகள் கொண்ட ரயில் 410 தொன் எடை கொண்ட இரும்பு இரும்பு சுருள்களைச் சிலி நாட்டிற்கு கொண்டு சென்றது.

இதன் மூலம் முதற்கட்ட சோதனைஓட்டம்வெற்றிஅடைந்த நிலையில் அடுத்தக்கட்டமாக சிலியில் இருந்து 400 தொன் சோயாபீன்கள் ஏற்றிச் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானில் வெடிகுண்டுத் தாக்குதல் 55 மாணவிகள் சாவு; 150 பேர் படுகாயம்



ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 55 மாணவிகள் கொல்லப்பட்டனர். தலைநகர் காபூலின் மேற்குப் பகுதியில் உள்ள ஷியா இனத்தவர் அதிகம் உள்ள தஷ்த் இ பார்ஷி என்ற இடத்தில் மேல்நிலைப் பள்ளி ஒன்றின் அருகில் இந்தக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதில் கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் மாணவிகளே என அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்பில் சிக்கிய 150 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் ஏராளமானோரின் நிலைமை மோசமாக இருக்கின்றன எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனால் உயிரிழப்போர் எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. இந்த குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.


விஸ்டம் தொழில் நுட்பக்கல்லூரி கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2020 தொழினுட்பப் பிரிவில் சித்தி பெற்றுள்ள எமது கல்லூரி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

(பல்கலைக்கழக நுழைவுத் தகுதியைப் பெற்றுள்ள எமது மாணவர்களில் ஒரு தொகுதியினர்)

பொறியியல் தொழினுட்பவியல்

| மாணவர் பெயர் | பெறு பேறு | பாடத் திட்டம் | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|---|
| வி.தமிழ்மாறன் | A2B | New | 01 | கிளி |
| அ.விஜயகணேஸ் | 2BS | New | 01 | முல்லை |
| மு.ப.மு.முஸ்ர்ரிப் | B2C | New | 01 | மன்னார் |
| ஆ.அபிலாஷன் | 2BC | Old | 01 | ஹற்றன் |
| ஜெ.பிரவண்ஜா | B2C | New | 02 | கிளி |
| கு.ஆனந்தி | ACS | New | 02 | முல்லை |
| கி.நிதர்சன் | 2BC | New | 03 | கிளி |
| ஜெ.துஸ்யந்தினி | 2AB | New | 04 | யாழ் |
| ரா.அரியன்பன் | B2C | New | 04 | கிளி |
| ர.பிரனித் | A2B | New | 05 | திருகோண |
| யோ.சுகந்தன் | 2AB | New | 06 | யாழ் |
| கு.வேணுகாந் | 2CS | Old | 09 | யாழ் |
| க.அர்ச்சிகா | A2B | New | 11 | யாழ் |
| பி.வரவன் | 2BC | New | 12 | யாழ் |
| த.மலரவன் | 3B | New | 13 | யாழ் |
| செ.டிலக்சன் | 2BC | New | 15 | யாழ் |
| கு.அனுரதன் | 2BC | New | 16 | யாழ் |
| கௌ.கரிதரன் | 3B | New | 17 | யாழ் |
| அ.கஜன்ராஜ் | A2C | New | 18 | யாழ் |
| சி.சயனி | ABC | New | 19 | யாழ் |
| ஜெ.டிலக்சன் | 2BC | New | 20 | யாழ் |
| க.நயுத்திரன் | 2BC | New | 21 | யாழ் |
| தே.கிருபானந் | 2BC | New | 23 | யாழ் |
| எஸ்.பிரதீபன் | A2C | New | 25 | யாழ் |
| ந.இசைப்பிரியன் | B2C | New | 26 | யாழ் |
| த.விந்துஜா | B2C | New | 30 | யாழ் |
| ச.கோபிகிருஸ்ணா | B2C | New | 32 | யாழ் |
| க.கமலரூபன் | B2C | New | 35 | யாழ் |

குறிப்பு :- நாட்டின் அசாதாரண சூழ்நிலை (Covid - 19) காரணமாக வகுப்புக்கள் அனைத்தும் தற்காலிகமாக நிகழ்நிலை (Zoom) இல் நடைபெறுகிறது.
அனைத்துப்பிரிவுகளுக்கும் புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
FB:- Wisdom Technical College

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| மாணவர் பெயர் | பெறு பேறு | பாடத் திட்டம் | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|---|
| க.மதுஜா I.Rank - 06 | 3A | New | 01 | யாழ் |
| ச.துளசிகன் | 2BC | Old | 01 | யாழ் |
| ம.கயலினி | 2AB | New | 01 | கிளி |
| க.அனிஸ்ரலன் | 3A | New | 02 | யாழ் |
| க.மதுரா | 3B | New | 02 | கிளி |
| தோ.யூஜின் | A2B | New | 02 | முல்லை |
| க.ர.சபானா | B2S | Old | 02 | புத்தளம் |
| சி.சரணியா | 2AB | New | 03 | யாழ் |
| ச.ஜிந்துஜா | B2C | New | 03 | கிளி |
| ம.சுதர்சினி | 3B | New | 05 | யாழ் |
| க.விஸ்ணுகா | ABC | New | 06 | யாழ் |
| ச.சஞ்சிகா | 3B | New | 10 | யாழ் |
| ச.ஜினோசன் | 2BC | New | 14 | யாழ் |
| கோ.கனிஸ்ரா | 3B | New | 15 | யாழ் |
| யே.ஆன்சுகனியா | B2C | New | 20 | யாழ் |
| கு.கிறிஸ்தீனா | B2C | New | 24 | யாழ் |
| சோ.யசிந்தன் | B2C | New | 25 | யாழ் |
| இ.வைஸ்ணவி | B2C | New | 26 | யாழ் |
| இ.மிதிலா | 3C | New | 30 | யாழ் |
| பி.கௌதமன் | ABS | New | 31 | யாழ் |
| ப.சிம்லா | 2BC | New | 32 | மாத்தறை |

தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு எனும் எமது இலக்கினை 6வது வருடமாகவும் அடைந்த பெருமையுடன் வெற்றிக்கு வித்திட்ட அதே ஆசிரியர் குழாத்தின் வழிகாட்டலில்
A/L 2021 மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்புக்கள்
A/L 2022, 2023 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Day Batch வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
மேலதிக தகவல்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
077 248 7774 , 076 552 9093, 021 221 7860


## ஆண்டுக்கு 20 அங்குலம் வரை பூமிக்குள் மூழ்கும் மெக்சிக்கோ

மெக்சிக்கோ நாட்டின் தலைநகரமான மெக்ஸிகோ சிட்டி ஆண்டுக்கு 20 அங்குலம் வரை பூமிக்குள் மூழ்கிக் கொண்டிருக்கின்றது என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நகரத்தின் கீழ்ப் பகுதியில் வறண்ட நதிப் படுகைகள் இருப்பதால் தடுத்து நிறுத்த முடியாத அளவிற்கு பூமிக்குள் ஆழ்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படு கிறது.

ஒரு காலத்தில் டெக்ஸ்கோ ஏரி இருந்த இடத்தில் இந்த நகரம் கட்டமைக்கப்பட்டது. தற்போது முழு நகரமும் களிமண்ணின் மேல் கட்டப்பட்டுள்ளதால் மெதுவாக உள்வாங்கிக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த 1900 ஆம் ஆண்டு மெக்சிக்கோ சிட்டி மூன்றரை அங்குலம் பூமிக்குள் உள்வாங்கிச் சென்றதை விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளனர்.

நகரத்தில் உள்ள நீர் நிலைகள் உயர்த்திக் கட்டப்படாவிட்டால் அடுத்த 150 ஆண்டுகளில் மெக்சிக்கோ சிட்டி கிட்டத்தட்ட 100 அடி அதிகமாக மூழ்கக்கூடும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பரவலாக நாட்டில் டெங்கு பரவும் அபாயம்





கொரோனா நாட்டில் வேகமாக பரவுவதைப் போன்று மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு பரவலாக நாட்டில் பரவும் அபாயம் நிலவி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீரின் ஆலோசனையுடன் டெங்கை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய மட்டக்களப்பு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காரியாலய சுகாதாரத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக டெங்கு காய்ச்சல் அபாயத்தில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக மாளிகைக்காடு, காரைதீவு 12 மற்றும் காரைதீவு 05 ஆம் பிரிவில் உள்ள இடங்களில் புகைவிசிறல் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன் மக்களுக்கு விழிப்புணர்வு அறிவித்தல்களும் இதன்போது வழங்கப்பட்டன. அடிக்கடி மழை பெய்து கொண்டிருப்பதால் சுற்றுச்சூழலில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களையும், நுளம்பு பெருகும் பொருள்கள் அனைத்தையும் அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கல்குடா கல்வி வலயத்தில் உயர்தரத்தில் முதல்நிலை



கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரப்பரீட்சை முடிவுகளின்படி உயிரியல் விஞ்ஞான பிரிவில் 2AB (பௌதிகவியல்-A ,இரசாயனவியல்-A ,உயிரியல்-B) என்ற பெறுபேற்றில் மாவட்ட நிலையில் 6ஆம் நிலையை பெற்று கிருபைரெத்தினம் ஜெயந்தினி என்ற இம்மாணவி பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அத்தோடு இம் மாணவியே இப் பாடசாலையில் மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது மாணவி என்பதும், கல்குடா வலயத்தில் மருத்துவத் துறைக்கு இம்முறை தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

நெருக்கடியான சூழலில் தனது கல்வியைத் தொடர்ந்து மாவட்டத்தில் 06ஆம் இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்ததோடு எதிர் கால மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு சிறந்த முன்னுதாரண மாக திகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாளுக்கு நாள் அதிகரிக்கும் மரணங்கள் மட்டக்களப்பில் பல்வேறுபட்ட விழிப்புணர்வு



மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளை மாவட்ட கொவிட் 19 செயலணியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக நேற்றைய தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் சுதத் மாசிங்க தலைமையில் மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் விழிப்புணர்வு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் இவ்விழிப்புணர்வு நடவடிக்கையில் பங்கேற்றிருந்ததுடன், தமிழ்மொழியில் வடிவமைக்கப்பட்ட விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் இதன்போது பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 11 மாதக் குழந்தையுடன் காணாமல் போன தாய்

மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் 11 மாதக்குழந்தையுடன் காணாமல் போன தாயாரைப்பற்றி தகவல் தெரிந்தால் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 0750462897 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி கிரான் பாரதி வீதி பிரதேசத்தைச் சேர்ந்த சந்திரகுமார் தசாங்கி என்ற தாயார் லக்ஷிகா என்ற 11 மாத குழந்தையுடன் பகல் 11 மணியளில் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் அங்கிருந்து வெளியேறி காணாமல் போயுள்ளார். இதனையடுத்து இவரை உறவினர்கள் பல இடங்களில் தேடியும் அவரைப்பற்றி எந்தவிதமான தகவலும் கிடைக்காததையடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே குறித்த தாயார் பற்றி தகவல் தெரிந்தவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலே அல்லது 0750462897 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவலை வழங்குமாறு அவரது உறவினர்கள் பொலிஸார் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

# யானை தாக்குதலால் இரு கடைகள் சேதம்

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முத்து நகர் கிராமத்தில் நுழைந்த காட்டு யானையால் இரு கடைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானையால் குறித்த பகுதியில் கடைகளை உடைத்து பொருள்களையும் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளது என பிரதேசவாசிககள் கவலை தெரிவிக்கின்றனர்.

காட்டு யானையின் தொடர் தாக்குதலால் நிம்மதியாக தூங்க முடியாமலும் கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் பல முறை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரி விக்கின்றனர்.

தங்களது அன்றாட வாழ்வாதாரமாக சிறிய இக்கடை மூலமே வாழ்ந்து வருகின்றோம் என கவலை தெரிவிக்கின்றனர். தொடர் காட்டு யானை அச்சுறுத்தல் இப் பகுதியில் நிலவி வருகிறது எனவே யானைகளின் தாக்குதலில் இருந்து தங்களையும் தங்களது உடைமைகளையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நோய்த் தொற்றை இல்லாதொழிக்க வேண்டி இன்று நாடு பூராகவும் சர்வ மத வழிபாடுகள்

ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகியோர்களின் எண்ணக்கருவிற்கு அமைவாக இலங்கையில் மிக வேகமாக பரவி வரும் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டியும், உலகிலிருந்து கொரோனா நோய்த் தொற்றை இல்லாதொழிக்க வேண்டியும் இன்று நாடு பூராகவும் சர்வமத வழிபாடுகள் இடம்பெற்றன,

இதற்கமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சம்மாந்துறை மஸ்ஜித்துல் நகர் பள்ளிவாசலில் சூரத்துல் பாத்திஹா ஓதுதல், யாஸீன் ஓதுதல், விசேட துஆ பிரார்த்தனை என்பன சம்மாந்துறை மஸ்ஜித்துல் நகர்ப் பள்ளிவாசல் தலைவர் எம்.எல்.தாசீம் தலைமையில் நடைபெற்றது.

# திருமலையை உலுப்பும் கொரோனாத் தொற்று

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை மாவட்டத்தில் 19 பேர் கொவிட் – 19 தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும், 1,883 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ.எம்.கொஸ்தா தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தால் இன்று (ஞாயிற்றுக்கிழமை) 10 மணியளவில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று சனிக்கிழமை காலை 10 மணி முதல் இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணி வரை 52 கொவிட் – 19 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை 442 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் மொத்தமாக 1,883 பேருக்கு கொவிட் – 19 தொற்று காணப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியை மற்றும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக மரணங்களும், அதிகளவிலான தொற்றாளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் தொடர்சியாக திருகோணமலை மாவட்டத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மாலைதீவில் அவுஸ்ரேலியர்கள் கைகலப்பு?



ஐ.பி.எல். தொடரில் விளையாடிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் மாலைதீவுகள் நாட்டில் தங்கியுள்ளனர்.

கொரோனா பாதிப்பு காரணமாக ஐ.பி.எல். தொடர் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. ஐ.பி.எல். தொடரில் விளையாடிய அவுஸ்ரேலிய வீரர்கள் மாலைதீவுகளுக்குச் சென்றுள்ளனர். அங்கிருந்து அவர்கள் தமது நாட்டுக்கு அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

இந்த நிலையில், மாலைதீவுகளில் உள்ள மதுபான விடுதியொன்றில் சன்ரைசர்ஸ் மற்றும் அவுஸ்திரேலிய அணிகளின் முன்னணி வீரரான டேவிட் வோர்னரக்கும் மற்றும் அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரரும் வர்ணனையாளருமான மைக்கேல் ஸ்லேட்டருக்குமிடையே கைகலப்பு நடைபெற்றது என அவுஸ்திரேலிய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இருவரும் முதலில் வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்து பின்னர் மோதலில் ஈடுபட்டது என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தகவலை சம்பந்தப்பட்ட இருவருமே மறுத்துள்ளனர் என்றும் தாங்கள் இருவருமே நல்ல நண்பர்கள் என்பதால் அப்படி நடக்க வாய்ப்பே இல்லை என்று இருவருமே மறுப்பு தெரிவித்துள்ளார் எனவும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# இரட்டைச் சதமடித்த அபித் அலி புதிய சாதனை



சிம்பாப்வே நாட்டில் பாகிஸ்தான் அணி வீரர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தற்போது டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடி வருகின்றனர். தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி ஹராரே நகரில் நடந்து வருகிறது. அதில், இரண்டாவது நாளில் பாகிஸ்தான் வீரர் அபித் அலி புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் முதன் முறையாக இரட்டைச் சதம் (215 ஓட்டங்கள்) அடித்த அவர், சிம்பாப்வே நாட்டில் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக ஓட்டங்களைச் சேர்த்த பாகிஸ்தானிய வீரர் என்ற சாதனையைப் புரிந்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான யூனிஸ் கான், ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களை எடுத்ததே இதுவரையான சாதனையாக இருந்தது. கடந்த 1998 ஆம் ஆண்டு மொஹமட் வசிம் ஹராரேவில் எடுத்த 192 ஓட்டங்கள் என்ற சாதனையை யூனிஸ் கான் முறியடித்திருக்க, அதனை 8 ஆண்டுகள் கழித்து அபித் அலி தன் வசப்படுத்தியுள்ளார்.

# பிரஷித் கிருஷ்ணாவுக்கு கொரோனாத் தொற்று



கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியைச் சேர்ந்த பிரஷித் கிருஷ்ணாவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்றிருந்த கிரிக்கெட் வீரர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று பரவியது. இதனால், ஐ.பி.எல். தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது ஐ.பி.எல். தொடரில் பங்கேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பி வருகின்றனர். இந்த நிலையில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியைச் சேர்ந்த பிரஷித் கிருஷ்ணாவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வேகப்பந்து வீச்சாளரான பிரஷித் கிருஷ்ணா கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்திய அணிக்காக ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதும் உலக சம்பியன்ஷிப் டெஸ்ட் இறுதிப்போட்டி மற்றும் இங்கிலாந்து தொடருக்கும் உதவி வீரராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சக்காரியாவின் தந்தை கொரோனாவால் மரணம்

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் இளம் கிரிக்கெட் வீரர் சேதன் சக்காரியாவின் தந்தை கொரோனா பாதிப்பால் இன்று காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சேதன் சக்காரியாவின் தந்தை கொரோனா பாதிப்புக்குள்ளாகி, குஜராத்தின் பாவ் நகரில் உள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவருக்கு ஏற்கனவே நீரிழிவு பாதிப்பு உள்ள நிலையில் வென்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்திருக்கிறார். இன்று அவர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார் எனதெரிவிக்கப்படுகிறது.

எளிமையான குடும்பத்திலிருந்து வந்த சேத்தன் சக்காரியா, இந்த ஆண்டு நடந்த சையட் முஷ்டாக் அலி ரி - 20 தொடரில், 5 போட்டிகளில் விளையாடி 12 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தியிருந்தார். இந்த திறமை வெளிப்பாடு காரணமாக 1.2 கோடி ரூபா கொடுத்து அவரை ராஜஸ்தான் ரோயல்ஸ் வாங்கியிருந்தது. 'ஐ.பி.எல். மூலம் கிடைத்த வருமானத்தால்தான் தந்தைக்கு சிகிச்சையளிக்க முடிந்தது. கிரிக்கெட் ஊதியமே எங்களது குடும்பத்தின் வாழ்வாதாரம்' என கூறியிருந்தார் சக்காரியா.



# டோக்கியோ ஒலிம்பிக் திட்டமிட்டபடி நடக்கும் ஒலிம்பிக் சபையின் துணைத் தலைவர் நம்பிக்கை!

உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வான ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க ஏற்பாடாகியிருந்த நிலையில், கொரோனா அச்சத்தால் தள்ளிவைக்கப்பட்டு வருகிற ஜூலை 23 முதல் முதல் ஒகஸ்ட் 8 வரை நடைபெறவிருக்கிறது.



ஆனால், மறுபடியும் கொரோனா பரவல் உச்சத்தை எட்டியிருப்பதால் ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி நடக்குமா? என்றகேள்விஎழுந்துள்ளது. இந்த நிலையில் சர்வதேச ஒலிம்பிக் சபையின் துணைத் தலைவரும், அவுஸ்திரேலிய ஒலிம்பிக் குழுத் தலைவருமான ஜான் கோயட்சிடம், தற்போதைய சூழலில் ஒலிம்பிக் போட்டி தள்ளிவைக்கப்படவோ அல்லது ரத்தாகவோ வாய்ப்பு உள்ளதா என்று கேட்கப்பட்டபோது, 'இல்லை, அதற்கு வாய்ப்பே இல்லை' என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

'எல்லாவிதமான கொரோனா தடுப்பு பாதுகாப்பு அம்சங்களையும் மேற்கொள்ள நாங்கள் ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். எல்லாம் சரியாக நடைபெற்றுவருகிறது.

கொரோனா தடுப்புக்கு தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துவோம். இங்கு தடுப்பூசி தேவை இருக்காது என்று அவர்கள் கணித்துள்ளனர். நிலைமையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஒலிம்பிக் திட்டமிட்டபடி நடக்கும்' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



# நஞ்சற்ற விவசாய முயற்சியில் யாழ். பல்கலை பட்டதாரிகள்

## அமைச்சர் டக்ளஸ் பாராட்டு





கிளிநொச்சி, திருவையாறு பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டதாரி மாணவர்கள் சிலரால் நவீன முறையிலான நெல் நாற்று நடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தச் செயற்பாட்டை நேற்று (சனிக்கிழமை) சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இளையோரின் முயற்சிகளைப் பாராட்டியுள்ளார்.

இந்த நவீன பொறிமுறையால் களைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன் களைநாசினிகளின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டு அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உற்பத்திச் செலவும் குறைவாக உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் எண்ணக்கருவுக்கு அமைய, நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்கிணங்க இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், நெல் பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு ஏற்றவகையில் நெல்லைக் குறைந்த செலவில் பாத்திகள் அமைத்து முளைக்கவைத்து, நாற்றுநடும் இயந்திரத்தைக் கொண்டு விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் நாற்று நாட்டப்படுகின்றது,

அத்துடன், அந்த வயல் நிலங்களில் புல் பிடுங்கும் இயந்திரம் மூலம் களை பிடுங்குவதன் மூலம் 100 வீதம் களைநாசினிகள் அற்ற, நஞ்சற்ற அரிசி வழங்கும் முயற்சியை விவசாயிக்ள மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

இந்நிலையில், குறித்த முயற்சியைப் பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான முயற்சிகளுக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடந்த வாரம் மாத்திரம் 86 கொவிட் மரணங்கள்

நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா மரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை பதிவாகியுள்ளன. இதற்கமைய கடந்த வாரம் 86 கொரோனா மரணங்கள் நாட்டில் பதிவாகியுள்ளன.


கடந்த சில நாள்களில் இலங்கையில் பதிவாகும் கொவிட் மரணங்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்துள்ளமை கொவிட் தொற்றின் தீவிரத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை 19 கொவிட் மரணங்கள் பதிவாகியிருந்தன.

குறித்த 19 பேரும் 12 மாவட்டங்களில் இருந்து பதிவாகியுள்ளமை மேலும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

உயிரிழந்தவர்களில் 8 பெண்கள் மற்றும் 11 ஆண்கள் அடங்குகின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் சுனன்தபுர, இலவாளை, கோன்கஹவெல, ரத்மலானை, தெஹியத்தகண்டிய, பதுளை, மயிலகஸ்தென்ன, வாத்துவை, கொள்ளுபிட்டி, ரத்தொலுவை, ராகமை, போத்தல, அலபலாதெணிய, அங்குலுகஹ, ஹிக்கடுவை, நுவரெலியா, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.



# அம்மாவை முதியோர் இல்லத்தில் ஒப்படைத்த மகனின் குரல் இது...!

பத்துமாதம் சுமந்த என் ஆருயிர் தாயை.!
பற்றுடன் பாக்க முடியாமல் விட்டேன்..!
பற்பல உதவிகள் செய்திட்ட அன்னையை..!
பக்கத்து முதியோர் இல்லத்திலே..!
பணம் கொடுத்து ஒப்படைத்து விட்டேன்..!

பற்றுறுதி தந்து வளர்த்த என் தாயே..!
பத்தியம் இருந்து நித்திரை முளித்தாய்..!
பள்ளிக்கு அழைத்து படிப்பித்து வைத்தாய்..!
பலரும் மதிக்க என்னை ஆளாக்கிவைத்தாய்.!
பரிதவிக்க உனை நான் விட்டேனே அம்மா..!

பசியுடன் வாடும் என்அம்மாவைப் பார்த்து..!
பதறி அழவும் என்னால் முடியாதே தாயே..!
பரிதாபத்தை என்னென்று சொல்வேன்..!
பலரும் அம்மாவுக்கு வாழ்த்து கூறும்போது..!
பகட்டுக்காக நானும் வாழ்த்துகிறேன் சும்மா.!

● அம்பிளாந்துறையூர் அரியம்



கவிஞர் மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண் ஆஸ்திரேலியா

# அகத்தில் வைத்துப் பூசிப்போம்!

தான்சுமந்து பெற்றபிள்ளை தலைநிமிர்ந்து வாழ்வதற்கு
தனக்குவரும் வலியனைத்தும் தாயேற்று நின்றிடுவாள்
ஊணுறக்கம் தனைமறப்பாள் ஒருகணமும் தனையெண்ணாள்
தான்பெற்ற பிள்ளைதனை தரமாக்கத் துடித்துநிற்பாள்!

பள்ளிசெல்லும் பிள்ளைபார்த்து துள்ளிநிற்கும் அவள்மனது
கள்ளமில்லா மனத்துடனே கன்னமதில் கொஞ்சிடுவாள்
பள்ளிவிட்டுப் பிள்ளைவரும் பாதைதனில் நின்றவளும்
துள்ளிவரும் பிள்ளதனைத் தூக்கிடுவாள் அன்பொழுக!

உச்சிமுகந்திடுவாள் ஊரார் கண்படா வண்ணம்
குட்டியாப் பொட்டுவைப்பாள் குழிவிழும் அக்கன்னமதில்
கட்டியணைத் தணைத்து கற்கண்டே எனவிழித்து
தொட்டிலே இட்டபடி தூங்கத்தமிழ் பாடிநிற்பாள்!

ஏங்கித் தவிக்கும்தாய் இதையெல்லாம் எண்ணுகின்றாள்
எதையுமே மனங்கொள்ளா இருக்கின்றான் அவர்பிள்ளை
தூங்காமல் கண்விழித்த தூயவளைப் பாராமல்
ஏங்கித் தவிக்கவிட்டு இவனிங்கே மகிழுகிறான் !

தாயவளோ காப்பகத்தில் தனையனையே நினைக்கின்றாள்
தாய்மைநிறை அவளுள்ளம் தவியாகத் தவிக்கிறது
தவிப்பறியா மனத்துடனே தனயனுமே இருக்கின்றான்
தாய்மனதை நோகடித்து தாம்வாழ்தல் முறையன்றோ!

காப்பகத்தில் தாயைவிட்டுக் களியாட்டம் நடத்துகின்ற
கருணையில்லா உள்ளங்களே கடவுளுமை மன்னிக்கார்
கர்ப்பத்தில் சுமந்தவளை கண்போலக் காத்தவளை
கவலையிலே மூழ்கவிட்டு வாழ்வதுதான் முறையாமோ!

நோய்வந்து படுக்கையிலே நூறுமுறை கண்விழித்து
பாய்மீதும் படுக்காமல் பஞ்சணையில் உறங்காமல்
கண்விழிக்கும் காலம்வரை கண்ணுறங்கா இருந்தவளை
காப்பகத்தில் விட்டுவிட்டு கண்ணுறங்க மனம்வருமா!

பரிசுபெற வேண்டுமென்று பலகனவு கண்டவளை
உரிமையுடன் பாராமல் ஒதுக்கிடுதல் முறையாமோ
கருவுற்ற நாள்முதலாய் பெற்றெடுக்கும் காலம்வரை
எமைநினைத்து நின்றவளை ஏங்கவிடல் முறையன்றோ!

அன்னைதனை அரவணையார் அகமகிழ வாழார்கள்
அன்னையவள் அடிதொழுவார் அனைத்துமே பெற்றிடுவார்
அன்னையது கண்ணீரால் அனைத்துமே அற்றுவிடும்
அன்னையவள் தினமதனில் அவளாசி பெற்றுநிற்போம்!

ஆர்மனதும் நோகாமல் வாழ்ந்துவந்த அன்னையவள்
ஆருமற்ற வெறுமையிலே அழவிடுதல் முறையன்றோ
அன்னைதினம் கொண்டாடும் அனைவருமே கேளுங்கள்
அன்னையது மனம்மகிழ அகத்தில்வைத்துப் பூசிப்போம்!



# கொரோனா அச்சம் நீங்க வேண்டி யாழில் நேற்று விசேட வழிபாடுகள்

## இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில்; தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்பு





(ந.லோகதயாளன்)

இலங்கையிலும் இந்தியாவிலும் நிலவும் கொரோனா அச்சம் நீங்க வேண்டி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் ஆகியவற்றிலேயே நேற்று மாலை இந்த விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாடுகளில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத்தூதுவர் பாலச்சந்திரன் உள்ளிட்ட அதிகாரிகளும், யாழ். மாவட்ட அரசியல்வாதிகளான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் மேலும் சிலர் பங்கு கொண்டனர்.

## உறுதிப்படுத்தப்படாத ஆயுர்வேத மருந்து விற்பனைக்குத் தடை

தரமானது என உறுதிப்படுத்தப்படாத ஆயுர்வேத மருந்துகளை விற்பனை செய்வதும், விளம்பரம் செய்வதும் மோசடி நடவடிக்கையாகும் என ஆயுர்வேத வைத்திய சபை வலியுறுத்தியுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளாத எவரும் இவ்வாறு மருந்துகளை விளம்பரம் செய்வது ஆயுர்வேத சட்டத்தின்படி குற்றமாகும்.

ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தரமற்ற மருந்தை சமூக ஊடகங்கள் ஊடாக அல்லது ஏனைய பகிரங்க ஊடகங்கள் வாயிலாக பிரசாரம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஆயுர்வேத வைத்திய சபை குறிப்பிட்டுள்ளது.

## சினோபோர்ம் தடுப்பூசி நேற்று 293 பேருக்கு வழங்கப்பட்டது

நாட்டில் நேற்று (சனிக்கிழமை) 293 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

பாணந்துறை மற்றும் மட்டக்குளி ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கே இவ்வாறு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

பாணந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என களுத்துறை பிராந்திய தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் பிரசாத் லியனகே தெரிவித்துள்ளார்.

## பி.சி.ஆர். முடிவு தாமதம் தெம்பரவெளவில் குழப்பம்

கொழும்பு, மே 09

நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக தெம்பரவெள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட திஸ்ஸமஹாராம ரபர்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் மூச்சுத் திணறல் காரணமாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர் அடுத்த நாள் அவர் உயிரிழந்த நிலையில் சில தினங்களுக்கு பின்னர் வெளியான பி.சி.ஆர். முடிவுகளில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அவர்களின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக திஸ்ஸமஹாராம பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று (சனிக்கிழமை) அவரது வீட்டுக்குச் சென்றிருந்த போது உறவினர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இவர் உயிரிழந்து 4 நாள்கள் ஆகியுள்ளன. இன்றுதான் பி.சி.ஆர். முடிவு வெளியாகியுள்ளது. சடலம் கிடைக்கும் வரை நாம் பார்த்துக் கொண்டுள்ளோம். கடைகளுக்குப் பொருள்கள் வாங்க சென்றோம்.

மக்கள் கூடிய பின்னர் இப்பொழுது வந்து கூறுகிறார்கள் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று என உறவினர்கள் தெரிவித்தனர்.

## கணவன் உயிர் மாய்த்ததை அறிந்த மனைவி அதே வழியில் தன் உயிரைக் காவு கொண்டார்

### யாழில் துயரம்

யாழ்ப்பாணம், மே 09

கணவன் உயிரை மாய்த்ததை அறிந்த மனைவியும் அதேவழியில் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம், யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத் தொழிலகப் பட்டறையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, திருநெல்வேலியைச் சேர்ந்த பரமலிங்கம் பகீரதன் (வயது 34) மற்றும் அவரது மனைவி ரஜிதா (வயது 33) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

கணவன், நகை வேலைக்குப் பயன்படுத்தும் இரசாயனத்தை வெள்ளிக்கிழமை மாலை உட்கொண்ட நிலையில், அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும் அவரது உயிர் பிரிந்தது.

இதனையறிந்த மனைவி அதே இரசாயனத்தை உட்கொண்ட நிலையில் அவரும் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500


## கைதடியில் மடக்கிப் பிடிக்கப்பட்ட முதலை புலிக்குளத்தில் பாதுகாப்பாக விடப்பட்டது!



(ந.லோகதயாளன்)

யாழ். கைதடியில் மடக்கிப் பிடிக்கப்பட்ட 8 அடி முதலை ஒன்று கிளிநொச்சி – புலிக்குளத்தில் பாதுகாப்பாக விடப்பட்டது.

கைதடிப் பகுதியில் வாகனத் திருத்தகம் ஒன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த முதலை தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த திணைக்கள அதிகாரிகள் முதலையை மடக்கிப் பிடித்தனர்.

அவர்கள் குறித்த முதலையை கிளிநொச்சி, பொன்னகர் பகுதியிலுள்ள புலிக்குளத்துக்கு நேற்று முற்பகல் கொண்டு சென்று பாதுகாப்பாக விடுவித்தனர்.


வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.



- ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
- வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

077 652 9583

Online. Cleaning & Caring (PVT) LTD



- உங்கள் வீடுகள், கடைத் தொகுதிகள் மற்றும் நிறுவனங்கள், அலுவலக பணியிடங்களுக்கு சுத்திகரிப்புச் சேவை தேவைப்படுபவர்களும்,
- வீட்டுப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுபவர்களும் தொடர்புகொள்ளவும்.
- வீட்டு பணியாட்கள் தேவை. 20 - 55 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 435 0737

# அருந்ததி
## இணைய திருமண சேவை

+94 777 164 524
www.arunthathee.com

## மணமகன் விபரம்

**15829 | வே | 1989**
திருகோணமலை | இந்து
168 செ.மீ | பட்டதாரி | AU
Registered Migration Agent
அத்தம் (கன்னி)

**18070 | கோ | 1989**
கரவெட்டி | இந்து | Canada
168 செ.மீ | சூ.செ:05
Surveyor | பட்டதாரி
மிருகசீரிடம் (ரிஷபம்)

**18454 | வே | 1990**
காரைநகர் | இந்து | Sg
183 செ.மீ | செ.வ் : 01
System Engineer | பட்டதாரி
உத்திரட்டாதி (மீனம்)

**17775 | வே | 1990**
சாவகச்சேரி | Finland
180 செ.மீ | பட்டதாரி
Engineer
அஸ்வினி (மேடம்)

**15991 | வி | 1990**
புங்குடுதீவு | இந்து
167 செ.மீ | France
Hotel Chef | உயர்தரம்
உத்தரம் (கன்னி)

**17880 | வே | 1994**
கல்வியங்காடு | இந்து | UK
176 செ.மீ | பட்டதாரி செ: 7
Accountant
திருவோணம் (மகரம்)

**17678 | வே | 1990**
பருத்தித்துறை | இந்து | Ae
179 செ.மீ | செ: 07
Qty Surveyor | பட்டதாரி
கேட்டை (விருச்சிகம்)

**18118 | வே | 1990**
அச்செழு | இந்து | UK
182 செ.மீ | டிப்ளோமா
Company Manager
மூலம் (தனுசு)

**16132 | வே | 1990**
இணுவில் | இந்து | AU
168 செ.மீ | செ.வ் :08
Qty Surveyor | பட்டதாரி
அனுஷம் (விருச்சிகம்)

**16517 | வி | 1990**
கொக்குவில் | இந்து | US
175 செ.மீ | செவ்: 07
Cashier | டிப்ளோமா
உத்தராடம் (மகரம்)

**17790 | வே+கு | 1990**
பருத்தித்துறை | இந்து | AU
172 செ.மீ | பட்டதாரி
Medical Laboratory Asst
ஆய்யிவியம் (கடகம்)

**15982 | வே | 1990**
கரவெட்டி | இந்து | Canada
175 செ.மீ | உயர்தரம்
HVAC Technician
ரேவதி (மீனம்)

**16105 | வே | 1990**
கரவெட்டி | இந்து
179 செ.மீ | France
Business Analyst | பட்டதாரி
புனர்பூசம் (மிதுனம்)

**18388 | வே | 1991**
நல்லூர் | இந்து | AU
Engineer | பட்டதாரி
166 செ.மீ
திருவாதிரை (மிதுனம்)

**16406 | வே | 1991**
வயவிளான் | இந்து | Swiss
180 செ.மீ
Staff | உயர்தரம்
பூராடம் (தனுசு)

**15763 | வே | 1991**
கொக்குவில் | இந்து
172 செ.மீ | செவ் : 12 | Germany
Restaurant Staff | உயர்தரம்
ஆய்யிலியம் (கடகம்)

**15811 | வே | 1991**
திருகோணமலை | இந்து | Fr
173 செ.மீ | செவ் :02
Staff | டிப்ளோமா
மூலம் (தனுசு)

**17612 | வே | 1991**
கரவெட்டி | இந்து | US
174 செ.மீ | சூ.செ : 05
Assistant Manager | உயர்தரம்
கேட்டை (விருச்சிகம்)

**16532 | வே | 1991**
மானிப்பாய் | இந்து | AU
165 செ.மீ | செவ் : 07
PHD Researcher | பட்டதாரி
அனுஷம் (விருச்சிகம்)

**16937 | வே | 1991**
அல்லாரை | இந்து | AU
178 செ.மீ | செவ் : 07
Staff | உயர்தரம்
உத்தரம் (கன்னி)

**17324 | கு | 1992**
பொலிகண்டி | இந்து | UK
167 செ.மீ | செ.வ் : 08
Test Engineer | பட்டதாரி
கார்த்திகை (மேடம்)

**18756 | வே | 1992**
புங்குடுதீவு | இந்து | Swiss
172 செ.மீ | செவ் :08
Staff at Reataurant | உயர்தரம்
அவிட்டம் (கும்பம்)

**17582 | வே | 1992**
காரைநகர் | இந்து | Sg
165 செ.மீ | செவ் :12
Senior Software | பட்டதாரி
உத்திரட்டாதி (மீனம்)

**17384 | வே | 1992**
இணுவில் | இந்து | Finland
161 செ.மீ | செவ் : 01
Staff | உயர்தரம்
பூராடம் (தனுசு)

## மணமகள் விபரம்

**17531 | வே | 1974**
சாவகச்சேரி | இந்து | Germony
152 செ.மீ | Widowed
Receptionist | உயர்தரம்
பூரட்டாதி (கும்பம்) | செ :02

**16754 | வே | 1984**
திருகோணமலை | இந்து | Ca
155 செ.மீ | பட்டதாரி
Analysisst in BioAnalysis
பூரம் (சிம்மம்) | Divorced

**18196 | வே | 1985**
அச்சுவேலி | இந்து | Canada
153 செ.மீ | பட்டதாரி
Coordinator at Finance Department
அய்யிவிலியம் (கடகம்)

**17492 | வே | 1985**
சங்கானை | இந்து | Germanoy
158 செ.மீ | சூ.செ :01
Engineer | பட்டதாரி
ஆய்யிலியம் (கடகம்)

**17829 | வே | 1985**
உடுவில் | இந்து | Swiss
172 செ.மீ
Engineer | பட்டதாரி
பூரட்டாதி (கும்பம்)

**19008 | கோ | 1992**
கொடிகாமம் | இந்து | UK
153 செ.மீ | பட்டதாரி
Finance Manager
மிருகசீரிடம் (ரிஷபம்) செ:02

**17489 | வே | 1989**
புன்னாலை | இந்து | Swiss
169 செ.மீ | பட்டதாரி
Accountant
உத்தரம் (சிம்மம்)

**18025 | வே | 1989**
கொக்குவில் | இந்து | UK
168 செ.மீ
Accountant | பட்டதாரி
பூரம் (சிம்மம்)

**18828 | வே | 1990**
மயிலிட்டி | இந்து | Canada
Immigration Officer
திருவாதிரை (மிதுனம்)
பட்டதாரி | 160 செ.மீ

**15745 | வே | 1990**
கந்தர்மடம் | இந்து | Sg
155 செ.மீ | பட்டதாரி
Project Engineer
அஸ்வினி (மேடம்)

**17153 | வே | 1990**
அரியாலை | இந்து | France
158 செ.மீ | பட்டதாரி
Healthcare Research Manager
மூலம் (தனுசு)

**17844 | வே | 1992**
கொக்குவில் | இந்து | Uk
162செ.மீ | பட்டதாரி
IT Systems Analysist
சதயம் (கும்பம்)

**17787 | கு | 1992**
தொல்லிப்பளை | இந்து | UK
168 செ.மீ | Bio- Rad
பட்டதாரி | செவ் :07
மிருகசீரிடம் (ரிஷபம்)

**17636 | வே | 1992**
புங்குடுதீவு | இந்து | UK
155 செ.மீ | செவ் :04
Trainee Solictor | பட்டதாரி
மூலம் (தனுசு)

**17486 | வே | 1993**
மட்டுவில் | இந்து | Swiss
176 செ.மீ | செவ் : 07
Administration Officer
கார்த்திகை (மேடம்)

**18623 | வே | 1993**
ஏளாலை | இந்து | Canada
158 செ.மீ | உயர்தரம்
Unemployed
சித்திரை (கன்னி)

**16985 | வே | 1993**
நெல்லியடி | இந்து | Uk
162 செ.மீ | பட்டதாரி
Uk Civil Service
உத்தரம் (சிம்மம்)

**18154 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | Uk
156 செ.மீ | பட்டதாரி
சுவாதி (துலாம்)
செவ் : 07

**17441 | ப | 1994**
ஏளாலை | இந்து
175 செ.மீ | பட்டதாரி
Accountant | சூ.செ : 04
பூரம் (சிம்மம்) | Denmark

**15985 | வே | 1994**
கரவெட்டி | இந்து | Canada
153 செ.மீ | சூ.செ : 06
Book Keeper
திருவாதிரை (மிதுனம்)

**17778 | வே | 1994**
பருத்தித்துறை | இந்து | Swiss
155 செ.மீ | செ.வ் : 08
Unemployed | பட்டதாரி
சித்திரை (துலாம்)

**17087 | ந | 1995**
நீர்வேலி | கிறிஸ்துவம் | US
158 செ.மீ | பட்டதாரி
அஸ்வினி (மேடம்)
செவ் : 01

**17747 | 1995**
யாழ்நகரம் | கிறிஸ்துவம் | US
152 செ.மீ | பட்டதாரி
patient Coordinater

**18921 | வே | 1998**
கைதடி | இந்து | Germany
161செ.மீ | சூ.செ : 07
Trainee | அனுஷம்
(விருச்சிகம்) | பட்டதாரி

அக்ஷய திருதியை முன்னிட்டு

# சிறப்பு வரன் தேடல்

மே மாதம் 10ம் திகதி முதல் 15ம் திகதி வரை
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு அலுவலகங்களில்

**இந்நிகழ்விற்கு ஜோதிடர் வருகை தரவுள்ளதால் உடனுக்குடன் ஜாதகப்பொருத்தம், ஜாதக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்**

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை (Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.




தற்பொழுது விற்பனையில்

அரச, தனியார் தொழில் புரியும் உள்நாட்டு , வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன் அருந்ததி திருமண இதழ் 23 இணையத்தில் வாசிக்க | www.rebrand.ly/i23

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2021 இல் வெளியிடப்பெற்றது.